# Reinterpretation Methods in Silappathikaram

**T. Bhuvaneswari**
*Ph.D., Research Scholar (Full Time) P.G. & Research Department of Tamil*
*Arignar Anna Government Arts College, Cheyyar, Tiruvannamalai*

**Dr. K. Venkatesan**
*Associate Professor P.G. & Research Department of Tamil*
*Arignar Anna Government Arts College, Cheyyar, Tiruvannamalai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981412

**Abstract**
*Silappathikaram has received much attention as a symbol of Tamil culture and a pride of Tamil literary tradition. 'Silapathikaram Re-reading Methods' is a critique that has come to view Silappathikaram in new ways in the light of post-structuralism. Silappathikaram is being re-read by readers and researchers.*
***Keywords:*** *Sangam Literature, Purananuru, Modern Poetry, Critical Journal, Three Great Truths of Silappathikaram, Bharathi's Poetry, Literary Criticisms*

**References**
1. Dr. M.P. Sivagnanam, Silappathikaram Criticism, Pavai Publications, Chennai. Edition 2013.
2. Th. M. S. Ragunathan, Literary Criticism, Tamil Nadu Textbook and Educational Services Corporation, Chennai. 2019.
3. S. Poongodi, Thoughts on Silappathikaram, Mani Offset, Chennai. First Edition – 2009.
4. V. Suba. Manickam, Epic Perspective, A.K.S. Publishing House, Nagercoil – 629 002. First Edition – 2012.
5. V. Suba. Manickam, Epic Perspective, Ramaiya Publishing House, Chennai – 600 014. First Edition – November 2010.
6. Dr. K. Eswari, Comparative Study of Literary Thoughts, New Century Book House, Chennai – 600 098. First Edition – 2011.
7. Dr. P. Saravanan, Silappathikaram Text and Commentary, Sandhya Publishing House, Chennai – 600 083. Third Edition – 2021.
8. T. S. Natarajan, Silappathikaram Re-reading, New Century Book House, Chennai – 600 050. November – 2019.
9. Dr. M. Arunachalam, Comparative Studies of Silappathikaram, New Century Book House (P) Ltd., First Edition – February 2020.
10. Soma. Ilavarasan, Epic Criticism, Meyyappan Publishing House, Chidambaram – 608 001. First Edition – November 2010.
11. Dr. M. Varadarajan, Thirukkural Clear Commentary, Saiva Siddhanta Publishing Society, Chennai – 600 018. 205th Edition – 2008.

# சிலப்பதிகாரத்தில் மறுவாசிப்பு முறைமைகள்

***த.புவனேஸ்வரி***
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு, திருவண்ணாமலை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

***முனைவர் க.வெங்கடேசன்***
இணைப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு, திருவண்ணாமலை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழர் பண்பாட்டின் ஓர் இலச்சினையாகவும் தமிழ் இலக்கிய மரபின் ஒரு பெருமிதமாகவும் அதிகம் கவனத்திற்குள்ளானது சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்தைப் புதிய வழித்தடங்களில் பின்னை அமைப்பியலின் ஒளியில் பார்த்திட வந்த ஒரு திறனாய்வே "சிலப்பதிகாரம் மறு வாசிப்பு முறைமைகள்". வாசகர்களாலும் ஆராய்ச்சியாளர்களும் சிலப்பதிகாரம் மறுவாசிப்புக்கு உட்படுத்தப்படுகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *சங்க இலக்கியம் – புறநானூறு – புதுக்கவிதை – விமர்சனப் பத்திரிக்கை – சிலப்பதிகார மூன்று பேருண்மைகள் – பாரதி கவிதை – இலக்கிய விமர்சனங்கள்.*

காப்பியங்கள் பல்வேறு காலங்களின் பல்வேறு சமுதாயங்களை இணைத்து நிற்கும் பாலங்களாகும். பன்முகப்பட்ட பார்வைகளோடும் தேவைகளொடும் சிலப்பதிகாரம் அணுகப் பட்டிருக்கிறது. பயில்தொறும் சிறப்புப் பெறுகின்ற பண்புடையாளர் தொடர்பு போல, நவில்தொறும் நூல் நயங்கள் புதிய வெளிகளைத் திறக்கின்றன. பண்பாட்டுத் தளத்திலும் தேசிய நெருக்கடிகளிடையேயும் சிலப்பதிகாரத்திற்கு மட்டுமல்ல, செவ்வியல் இலக்கியங்கள் பலவற்றிற்கும் புதிய விளக்கங்கள் தேவைப்படுகின்றன.

இளங்கோவடிகளுக்கு முன்பே சிலப்பதிகாரக் கதைக்குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. "வையாவிக் கோப்பெரும் பேகன்" என்னும் வள்ளல் தன் மனைவி கண்ண கியை விட்டுப் பிரிந்து வேறொரு பெண்ணுடன் வாழ்வதைக் காணும் புலவர்கள் பாடும் ஐந்து பாடல்கள் *(143 - 147)* புறநானூற்றில் உள்ளது. தலைவனின் பிரிவுத்துயரம் தாங்க முடியாத தலைவி ஒருத்தி தனது முலையை அறுத்து க்கொண்ட திருமாவுண்ணியாக மாறியது பற்றி நற்றிணைப் பாடல் கூறுகின்றது.

**ஏதிலாளன் கவலை கவற்ற**
**ஒருமுலை அறுத்த திருமா வுண்ணி (நற்.216)**

என்று சித்தரிக்கின்றது. பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தின் பதிகம் பத்தினிக் கடவுளுக்குக் கல் படிமம் கொண்ட செய்தியை எடுத்துரைக்கின்றது.

**கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டி**
**கான்நவில் கானம் கணையின் யோகி**
**ஆரிய அண்ணலை வீட்டி யேரிசை**
**இன்பல் அருவி கங்கை மண்ணி**
**(பதிற்று.5ஆம்.பதிகம்)**

தமிழ் பண்பாட்டின் மீதும் கலாச்சாரத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்திய காப்பியம் சிலப்பதிகாரமே. இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள

கண்ணகி, கோவலன், மாதவி, பொற்கொல்லன் ஆகியோர் புதுக்கவிதையில் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப் படுகின்றனர். கவிஞர் மீரா "தூர தரிசனம்" என்னும் கவிதையில் கற்பின் கனலியான கண்ணகியின் சிலையைக் காலையில் வணங்கிவிட்டுக் கற்புக் கவிதைகள் படைத்திடும் கவிஞர்கள் மாலையில் கோடம்பாக்கத்து மாதவியின் வீட்டுக் கதவுகளைத் தட்டிடும் இரட்டை வேட நிலையினை விமர்சனம் செய்கிறார்.

**காலையிலே கடற்கரையில்**
**கண்ணகியின் சிலையைக்**
**கைகூப்பிக் கும்பிட்டுக்**
**கற்புக் கவிதைகள் கொட்டுகிறோம்**
**அந்திமாலையிலே**
**கோடம்பாக்கத்தில் குடியிருக்கும்**
**ஏதோ ஒரு மாதவியின்**
**வீட்டுக் கதவைத் தட்டுகிறோம்!**

என்று பெண்மையின் கற்பினை மதிக்காமல் சொல்லிலும் செயலிலும் வேறுபாடுகள் கொண்டிருக்கும் சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

புதுக்கவிஞர்களில் குறிப்பாகப் பெண் கவிஞர்கள் கண்ணகியின் காற்சிலம்பைப் போராட்டக் குறியீடாகவும் நவீனப் பெண்ணியத்தின் சின்னமாகவும் அடையாளப்படுத்துகின்றார்.

முதன்முதலாக விமர்சனம் என்பதை ஒரு கோட்பாடாக ஒரு சொல்லாடலாக நிகழ்த்தியவர். (தொ.மு.சி.ரகுநாதன், 1948)

மாத்யூ அர்னால்ட் சொல்வதுபோல் இலக்கியம் என்பது வாழ்க்கையின் விமர்சனம்தான்.

இலக்கியத்தில் பத்தினி இலக்கியமும் பரத்தை இலக்கியமும் கிடையாது. நல்லவை, மோசமானவை தான் உண்டு என்று ஆஸ்கார் ஒயில்டு எழுதி வைத்திருக்கின்றார்.

ஆங்கிலத்தில் விமர்சனங்களுக்கென்றே தனிப் பத்திரிக்கைகள் வெளிவருகின்றன. (Saturday Review of Literature)

சிலப்பதிகாரம் கதை உண்மையாக இளங்கோவடிகள் கண்ட கதையல்ல. செவி வழியாக குன்றக்குரவை மக்கள் கூறிய நிகழ்வு. இக்காப்பியம் துன்பியல் நாடகமாக அமைகிறது. சிலப்பதிகாரத்தின் நோக்கம் மூன்று உண்மைகளைச் சொல்லும் படைப்பு ஆகும் என்பதே அறிஞர்கள் பலரின் முடிபாகும். இளங்கோவடிகள் தமக்கு வரவிருந்த அரசு பொறுப்பைத் துறந்து மூவேந்தர், பாரத வேந்தர், வட வேந்தர்கள் எல்லோரிடமும் காணப்பட்ட சீர்கேடுகளை அகற்றவும் அவர்களின் சிறப்புகளை மக்களுக்குப் புலப்படுத்தவும் அரசியல் பெருங்காப்பியத்தை இயற்றுகிறார். சிலப்பதிகாரத்தின் கருப்பொருளாக அறிமுகப்படுத்தியவை.

**அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்**
**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்**

ஆகும். இம்மூன்று உண்மைகளிலும் முரண்பாடு காணப்படுகிறது.

இம்முதல் உண்மையில் சிறப்பான முறையில் பாண்டியன் நெடுஞ்செழியன் மனசாட்சியுள்ள மன்னனாக ஆட்சி செய்து வருகிறான். இது வரையிலும் எவராலும் குறைக்கூற முடியாத அளவில் செங்கோன்மை கடைப்பிடிக்கின்றான்.

**வேலன்று வென்றி தருவது மன்னவன்**
**கோலதூஉம் கோடாது எனின் (546)**

அரசனுக்கு வெற்றியைத் தருவது வேலன்று. அவனது செங்கோலே; அதுவும் நீதியிலிருந்து மாறுபடாதிருக்குமாயின்,

**எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்**
**தண்பதத்தான் தானே கெடும் (548)**

நீதி வேண்டியோர் எளிதாகப் பார்த்துப் பேசத்தக்க நிலையில் உள்ளவனாகி, அவர் சொல்லியவற்றை ஆராய்ந்து, நீதி செய்யாத மன்னவன், தாழ்ந்த நிலையில் நின்று தானே கெட்டு விடுவான்.

இக்கருத்திற்கேற்ப பாண்டியன் நெடுஞ்செழியன் செங்கோன்மை ஆட்சியில் பொற்கொல்லனால் தீங்கு ஏற்பட்டது. மன்னன் ஊடலில் மனம் அமைந்ததை அறிந்த கள்வனான பொற்கொல்லன் கோவலனை கள்வன் என்று பொய்யுரைத்தான்.

அறம் என்பது அனைவருக்கும் உரியது. ஆனால், இங்கு மன்னனுக்கே உரிதெனக் கருதப்படுகிறது. ஆகையால், மன்னன் தன் தவற்றிற்காக உயிர் விடுகிறான். கோப்பெருந்தேவியும் உயிர் துறக்கிறாள். இங்கு அரசன் நேர்மையானவனாகவும் பொற்கொல்லனே கள்வனாகவும் கயவனாகவும் இருப்பதைக் காண்கிறோம்.

"அறம்" சிலப்பதிகாரத்தை பொறுத்தவரையில் தனிப்பட்ட அந்தப் பாண்டிய மன்னனுக்கே உரியது என்பது ஆராயத்தக்கது. தன்னை அறியாமல் தவறு செய்துவிட்ட மன்னன், தன் தவறை உணர்ந்த பிறகு, தனக்குத் தானே தண்டனை கொடுத்துக் கொள்கிறான். அறம் என்ற அவனுடைய மனசாட்சி தந்ததுதான் அத்தண்டனை.

அறன் ஆட்சி முறைக்கு உரிய அறத்தில் தவறாமல் அறமல்லாதவற்றை நீக்கி, வீரத்தில் குறைபடாத மானத்தை உடையவனே சிறந்த அரசன் ஆவான். சிலம்பைத்திருடி இந்தப்பிழைக்குக் காரணமானவனான பொற்கொல்லனுக்கு அறம் கூற்றாகவில்லையா? இதில் மன்னனுக்கு மட்டும் அறம் உள்ளதா? என்ற இந்த முதல் உண்மையே பயன்பாட்டுப் பார்வையில் ஆய்வதற்குரியதாகும்.

இரண்டாவது உண்மையாக "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" சிந்திக்க வேண்டியதாகும். இக்காப்பியத்தில் இளங்கோவடிகள் எதை வற்புறுத்துகிறார். அரசியலா? கற்பா? ஊழா? என்ற கேள்வி எழுகிறது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி தெய்வத்தைக் கண்ணாறக்கண்டதாகக் குன்றக்குறவர்கள் கூறியதை சேர மன்னன் செங்குட்டுவன், தன்னுடன் மலைவளம் காண வந்த மனைவி வேண்மாளை நோக்கி,

**உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்**
**செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்**
**நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்?**
***(சிலம்பு.காட்சிக்காதை.பா.107-109)***

என்று கேட்கிறாள். தன்னுயிர் கொண்டு கணவன் உயிரைத் தேடிச்சென்ற பாண்டி மாதேவி, கணவன் உயிரைக் கொன்ற ஆட்சியைப் பழிவாங்கி அடங்காச் சினத்துடன் சேர நாட்டின் செங்குன்றத்தை அடைந்த கண்ணகி தேவி, இவ்விருவரில் சேரமாதேவி மிகுதியும் விரும்புவது யாரையோ? எனக் கேட்க, கோப்பெருந்தேவியின் அறக்கற்பு அவளைக் கவரவில்லை. இது தமிழக மகளிர் வழி வழி கடைப்பிடிக்கும் வழக்கம். வரலாறு. "அவள் நற்கதியடைவாள்" எனக் கூறி, "மறக்கற்பைக் கடைப்பிடித்து நமது நாட்டினை அடைந்த பத்தினிக் கடவுளை வழிபடுவோம் என்கின்றாள் கோவேண்மாள்.

சேரமாதேவியைக் கொண்டும் கண்ணகியின் மறக்கற்பிற்கே மாண்பு தேடுகிறார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் நாம் காண்கின்ற பாத்திரங்களில் கண்ணகி மட்டும்தான் கற்புள்ளவளா? அதில் வரும் தேவந்தி, வயந்தமாலை, மாதரி, ஐயை, கோப்பெருந்தேவி, ஏன் பொற்கொல்லன் மனைவி ஆகியோரின் கற்பு உயர்வில்லாத கற்பா? இளங்கோவடிகள் காட்டும் கற்புநெறி கண்ணகிக்கு மட்டுமே எனக் கூறவியலாது. சமுதாயத்தில் உள்ள அனைவருக்குமே உரியதாக கருதப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் கண்ணகி கற்புக்கு உடல் ரீதியாக எவ்வித இடையூறும் பூம்புகாரிலோ, மதுரையிலோ ஏற்படவில்லை. கணவனை இழந்த பெண் துயரம் கவலைக் குரியதே, கண்ணகியின் கற்புக்கும் துயரத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல்" என்ற வரியைப் படித்த மகாகவி பாரதி "கற்பு நிலை என்று பேச வந்தார் இரு கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்" என்கிறார்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்புநெறி ஒன்றுதான் என்கிறார். ஆணுக்குக் கற்புநெறி அவசியமில்லாதது என்ற நிலை இளங்கோவடிகள் காலம். கம்பன் காலம் ஆணுக்கும் கற்புநெறி வலியுறுத்தப்பட்டது. ஆடவன் ஒருவன் கற்புள்ளவனாக இருந்தால்தான் பெண்ணும் கற்புள்ளவளாக வாழமுடியும்.

மூன்றாவது உண்மையான "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்பது முந்தைய ஜென்மத்தில் பாவங்கள் செய்திருப்பானேயானால், அந்தப் பாவங்கள் அந்த வினைக்கு உரியவனைச் சென்று பழி வாங்கியே தீரும் என்பதே வினைக்கோட்பாடு.

**பேதைப் படுக்கும் இழவுஊழ்; அறிவகற்றும்**
**ஆகல்ஊழ் உற்றக் கடை *(372)***

பொருள் இழந்தற்குக் காரணமான ஊழ் பேதையாகும். பொருள் ஆவதற்குக் காரணமான ஊழ், அறிவைப் பெருக்கும். பேதையான கோவலன் எதையும் ஆராயாமல் அனைத்து இடங்களிலும் தவறிழைக்கிறான். இதற்கு ஊழ்வினை காரணம் காட்டப்படுகிறது.

கோவலன் பாத்திரப்படைப்பு தனது வாழ்நாளில் உருப்படியாகச் செய்தது எதுவுமில்லை. ஊழ்வினை எனக் கூறுவது கோவலனின் தீய ஒழுக்கங்களுக்கு நியாயம் கற்பிக்கும் செயலாகும்.

***உடையவள் சக்தி யாண்பெண் ணிரண்டும்***
***ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்***
***(பெண் விடுதை, பா.1)***

என்கிறார் பாரதி. ஆண், பெண் சமம் என சமவுரிமை கோருகிறான். தாசியின் மயக்கத்தால் தாரத்தையே மறந்து, தன்னுடைய பொருளையும் தொலைத்து நிற்பவனை நல்லவன் என்று யாரால்தான் கூறவியலும். தன்னுடைய பாத்திரத்தைத் தவறாகக் காட்ட விருப்பமின்மையால் ஊழ்வினை மேல் பழியைப் போடுகிறார் இளங்கோ.

அரசியல் பிழை செய்த பாண்டியனுக்கு எதிராக அறத்தையே கூற்றாக்கிய இளங்கோ, அக்கூற்று பொற்கொல்லனுக்கு இல்லையா? காப்பியத்தில் கோவலன் மாதவிக்கு மணிமேகலை குழந்தை இருப்பதாக கூறிய இளங்கோ "தந்தையர்க்கு அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை" என்பது ஔவையின் வாக்கு". மணிமேகலையை மறந்து ஊழ்வினை காரணமென்றால் இது சூழ்வினை ஆகாதா? மதுராபுரித் தெய்வமும் கோவனுக்கும் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும் ஊழ்வினை உள்ளது. ஆனால், கண்ணகிக்கு இல்லை என்று குறிப்பிடுகின்றது. கோவலன் மாதவியிடமிருந்து பிரியும்போது,

***யாழிசைமேல் வைத்துத் தன்***
***ஊழ்வினை வந்து உருத்தாகலின்***
***உலவுற்ற திங்கள் முகத்தானைக்***
***கலவுக்காக ஞெகிழ்ந்தனன் (கானல்வரி)***

என்றும் கண்ணகியுடன் கோவலன் மதுரைக்குப் புறப்படும்போது

***வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்***
***கனைசுடர் கால்சீயா முன்***
***(கனாத்திறமுரைத்த காதை)***

என்றும் மன்னரின் கொலைஞர்களுடன் பொற்கொல்லன் கோவலனை அணுகுங்கால்,

***காவலன் ஏவக் கருத்தொழிற் கொல்லனும்..***
***தீவினை முதிர்வலைச் சென்றுபட்டிருந்த***
***கோவலன் தன்னைக் குறுகினன்.***
***(கொலைக்களக்காதை)***

என்றும் அடிகள் கூறுவதால் கோவலனுக்கு முற்பிறப்பு ஊழ்வினை உண்டென்பது உறுதிப் படுத்தப்படுகிறது. பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும் ஊழ்வினை இருப்பதை,

***வினைவிளை காலம் ஆதலின் யாவதும்***
***சினையலர் வேம்பன் தேரான்.***
***(கொலைக்களக்காதை)***

என்று கூறுகிறார். ஆனால், கண்ணகிக்கும் ஊழ்வினை உண்டு. அந்த வினையால்தான் அவள் கணவனை இழந்தாள் என்று எங்கும் அடிகள் கூறவில்லை. ஆனால், சிலப்பதிகாரத்தில் "சூழ்வினைச்சிலம்பு" என்று பதிகத்தில் வருவதனைக்காட்டி "சிலம்புக்கு ஊழ்வினை உண்டென்று உறுதிப்படுவதால், அந்த சிலம்புக்குரிய கண்ணகிக்கும் ஊழ்வினை உண்டு என்பது கூறலாம். இந்த சூழ்வினை ஊழ்வினை ஆகாது.

கண்ணகி "வல்வினை" என்றும் கூறுவது கடுவினையேன் என்று கூறுவது ஊழ்வினையாவாது. அது வேதனையால் வெளிப்பட்ட வெறுப்புரை. மாணிக்கவாசகர் தம்மை "நாயேன்; நீசனேன்" என்றும் வள்ளலார் தம்மை மலத்திடையே புழுத்த சிறு புழுக்களிலும் கடையேன்" என்று கூறுவதால் அவர்கள் கொடியவர்கள் என சான்றாகாது. (திருவருட்பா. பா.6)

விமர்சனங்களைப் பற்றி மாப்பஸான் கூறும் இலக்கணம். ஒரு விமர்சகனின் முக்கிய குணாதிசயங்கள் உண்மையில் என்ன? தனக்குத் தானே முடிவு கட்டிய கொள்கைகள், குறிப்பிட்ட கலைக் குழாத்தின் அபிப்பிராய பேதங்கள், இலக்கிய வர்க்க உணர்ச்சியால் ஏற்படும் விருப்பு வெறுப்புகள் இத்தனையும் ஒதுக்கி வைத்து விட்டு, அந்த நூலிலுள்ள எதிர்ப்பு மனோபாவம் ஒத்துவராத மனப்பாங்கு முதலியவைகளைச் சரிவர உணர்ந்து, அவைகளைப் பாராட்டியும் தீர்க்கமாய்த் தெரிவிப்பதும் விளக்கியும் எழுதுவதோடு பல்வேறு முயற்சிகளை ஒப்புக்கொள்வதும் முக்கியமாகும். எனவே, சிலப்பதிகாரத்தில் இம்மூன்றும் பேருண்மைகளும் விவாதத்திற்கும் மறுவாசிப்பிற்கும் உள்ளாக்கப் படுவது அவசியமாகும்.

## துணைநூற்பட்டியல்

1. டாக்டர் ம.பொ.சிவஞானம், சிலப்பதிகாரத் திறனாய்வு, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை. பதிப்பு 2013.

2. தொ.மு.சி.ரகுநாதன், இலக்கிய விமர்சனம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை. 2019.
3. சா.பூங்கொடி, சிலப்பதிகாரச் சிந்தனைகள், மணி ஆப்செட், சென்னை. முதற்பதிப்பு - 2009.
4. வ.சுப.மாணிக்கம், காப்பியம் பார்வை, ஏ.கே.எஸ். பதிப்பகம், நாகர்கோவில் - 629 002. முதற்பதிப்பு - 2012.
5. வ.சுப.மாணிக்கம், காப்பியப் பார்வை, ராமையா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - நவம்பர் 2010.
6. முனைவர் கி.ஈஸ்வரி, இலக்கியச் சிந்தனைகள் ஒப்பாய்வு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு - 2011
7. டாக்டர் ப.சரவணன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், சந்தியா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு - 2021.
8. தி.சு.நடராசன், சிலப்பதிகாரம் மறுவாசிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, நவம்பர் - 2019
9. முனைவர் மு.அருணாசலம், சிலப்பதிகாரம் ஒப்பாய்வுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், முதற்பதிப்பு - பிப்ரவரி 2020
10. சோம. இளவரசு, காப்பியத்திறன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். முதற்பதிப்பு - நவம்பர் 2010.
11. டாக்டர் மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 205 பதிப்பு - 2008.